பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை

03 02 2025 **MONDAY** **7.15 PM**

ஆகாஷவாணி

தலைப்புச் செய்திகள்

1. தில்லி சட்டப்பேரவைத் தேர்தலுக்கான பிரச்சாரம் இன்று மாலையுடன் நிறைவடைந்தது.
2. அமெரிக்காவில் தாம் மேற்கொண்ட அரசு முறைப்பயணம் குறித்து மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் திரு ராகுல்காந்தி திட்டமிட்டே தவறான தகவல்களை தெரிவிப்பதாக வெளியுறவு அமைச்சர் திரு ஜெய்சங்கர் குறை கூறியுள்ளார்.
3. மத்திய பட்ஜெட்டில் ரயில் பயணிகளின் பாதுகாப்பிற்காக ஒரு லட்சத்து 16 ஆயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக ரயில்வே அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.
4. சிரியாவில் இன்று நேரிட்ட குண்டுவெடிப்பு சம்பவத்தில் 19 பேர் உயிரிழந்தனர் 15 பேர் காயமடைந்தனர்.
5. ஈரானில் நடைபெற்ற சர்வதேச சேலஞ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Manraj Singh** பட்டம் வென்றார்.

இனி விரிவான செய்திகள் ---

<<<<<<>>>>>>

தில்லி சட்டப்பேரவைத் தேர்தலுக்கான பிரச்சாரம் இன்று மாலையுடன் நிறைவடைந்தது.

வாக்குப்பதிவு நாளை மறுநாள் நடைபெறவுள்ளது.

70 உறுப்பினர்களை கொண்ட தில்லி சட்டப்பேரவைக்கு நடைபெறும் தேர்தலில், பிஜேபி, காங்கிரஸ், ஆம் ஆத்மி வேட்பாளர்கள் உட்பட 699 பேர் களத்தில் உள்ளனர்.

தில்லி சட்டப்பேரவைத் தேர்தலோடு உத்தரப்பிரதேசத்தின் மில்கிபூர் மற்றும் தமிழகத்தின் ஈரோடு கிழக்கு சட்டப்பேரவைத் தொகுதிக்கும் நாளை மறுநாள் நடைபெறவுள்ள இடைத்தேர்தலுக்கான பிரச்சாரமும் இன்று மாலை நிறைவடைந்தது.

இந்த தேர்தலில் பதிவாகும் வாக்குகள் வரும் சனிக்கிழமை எண்ணப்படுகின்றன.

<<<<<<>>>>>>

அமெரிக்காவிற்கு கடந்த டிசம்பர் மாதம் தாம் மேற்கொண்ட அரசு முறைப்பயணம் குறித்து மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் திரு ராகுல்காந்தி திட்டமிட்டே தவறான தகவல்களை தெரிவிப்பதாக வெளியுறவு அமைச்சர் திரு ஜெய்சங்கர் குறை கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், இந்த பயணத்தின்போது அமெரிக்க அதிபர் பதவியேற்பு விழாவிற்கு பிரதமர் திரு நரேந்திர மோடிக்கு அழைப்பு விடுப்பது தொடர்பாக விவாதிக்கப்படவில்லை என்றும் திட்டவட்டமாக அவர் கூறினார்.

இதுபோன்ற நிகழ்வுகளில் பிரதமர் திரு நரேந்திர மோடி பங்கேற்பதில்லை என்றும் தெரிவித்தார்.

அரசியல் காரணங்களுக்காக திரு ராகுல்காந்தி, இதுபோன்ற தவறான கருத்துக்களை தெரிவிப்பது சர்வதேச அரங்கில் இந்தியாவின் நன்மதிப்பிற்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்றும் திரு ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

<<<<<<>>>>>>

மத்திய பட்ஜெட்டில் ரயில் பயணிகளின் பாதுகாப்பிற்காக ஒரு லட்சத்து 16 ஆயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக ரயில்வே அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், 100 அம்ரித் பாரத், 50 நமோ பாரத் மற்றும் 200 வந்தேபாரத் ரயில்களுக்கான பெட்டிகள் உற்பத்தி செய்யப்பட உள்ளதாக கூறினார்.

தமிழகத்தின் ரயில்வேத் திட்டங்களுக்காக வரும் நிதியாண்டில், ஆறாயிரத்து 626 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் திரு அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

உடான் விரிவாக்கத்திட்டத்தின்கீழ், நாடு முழுவதும் அடுத்த பத்தாண்டுகளுக்குள் 100 புதிய விமான நிலையங்கள் ஏற்படுத்தப்பட உள்ளதாக சிவில் விமான போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு ராம்மோகன் நாயுடு கூறியுள்ளார்.

இன்று மாநிலங்களவையில் கேள்விநேரத்தின்போது இதனை தெரிவித்த அவர், சிவில் விமான போக்குவரத்துத்துறை தொடர்ந்து வளர்ச்சி கண்டு வருவதாக தெரிவித்தார்.

பயணிகளின் பாதுகாப்பிற்கு உயர் முன்னுரிமை அளிக்கப்பட்டிருப்பதாகவும் திரு ராம்மோகன் நாயுடு கூறினார்.

<<<<<<>>>>>>

இந்தியாவுக்கு வரும் சுற்றுலாப்பயணிகளின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருவதாக மத்திய சுற்றுலாத்துறை அமைச்சர் திரு கஜேந்திர சிங் ஷெகாவத் கூறியுள்ளார்.

மக்களவையில் இன்று கேள்விநேரத்தின் போது இதனை தெரிவித்த அவர், கடந்த இரண்டாண்டுகளில் மட்டும் வெளிநாடுகளிலிருந்து வரும் சுற்றுலாப்பயணிகளின் எண்ணிக்கை 47 புள்ளி ஒன்பது சதவீதம் வளர்ச்சி கண்டுள்ளதாக கூறினார்.

மத்திய அரசு மேற்கொண்ட பல்வேறு நடவடிக்கைகள் காரணமாக, இது சாத்தியமானதாகவும் அவர் தெரிவித்தார்.

அதிகபட்சமாக பங்களாதேஷூலிருந்தும், அதனைத்தொடர்ந்து, அமெரிக்கா மற்றும் இங்கிலாந்திலிருந்து சுற்றுலாப்பயணிகள் வருகை புரிந்துள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

நாடு முழுவதும் 23 மாநிலங்களில் 3 ஆயிரத்து 200 கோடி ரூபாய் செலவில் சுற்றுலாத்தளங்கள் மேம்படுத்தப்பட்டு வருவதாகவும் திரு கஜேந்திர சிங் ஷெகாவத் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

தேசிய விளையாட்டு மேம்பாட்டு நிதியத்திற்கு பங்களிக்குமாறு தொழில்துறையினருக்கு தொடர்ந்து கோரிக்கை விடுக்கப்படுவதாக மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா கூறியுள்ளார்.

இன்று மக்களவையில் கேள்விநேரத்தின்போது இதனை தெரிவித்த அவர் தொழில் நிறுவனங்களுக்கான சமுதாய பொறுப்பித் திட்டத்தின்கீழ் நிதி வழங்குமாறு வலியுறுத்தப்பட்டுள்ளதாக கூறினார்.

இதுதொடர்பாக தொழில் நிறுவனங்களின் பிரிதிநிதிகளுடன் தொடர்ந்து ஆலோசனை நடத்தப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

தேசிய விளையாட்டு நிதியத்திற்கு நன்கொடை வழங்கும் தொழில் நிறுவனங்களுக்கு வரிச்சலுகை கிடைக்கும் என்றும் அமைச்சர் கூறினார்.

<<<<<<>>>>>>

நிலக்கரி உற்பத்தி தொடர்ந்து அதிகரித்து வருவதாக மத்திய சுரங்கத்துறை அமைச்சர் திரு கிஷன் ரெட்டி கூறியுள்ளார்.

இன்று மாநிலங்களவையில் கேள்விநேரத்தின்போது இதனை தெரிவித்த அவர், நிலக்கரி உற்பத்தியை மேலும் அதிகரிக்க கூடுதல் முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருப்பதாக தெரிவித்தார்.

நிலக்கரி உற்பத்தி அடுத்த ஐந்தாண்டுகளுக்குள் 153 கோடியே 30 லட்சம் டன்-னை எட்டும் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் திரு கிஷன் ரெட்டி கூறினார்.

<<<<<<>>>>>>

இனி மகா கும்பமேளா குறித்த செய்திகள்.

*(சவுண்ட் பைட் - **Song - 8** செகண்ட்ஸ்)*

உத்தரப்பிரதேசத்தின் பிரயாக்ராஜில் நடைபெற்றுவரும் உலகின் மிகப்பெரிய ஆன்மிக திருவிழாவான மகா கும்பமேளாவில் இன்று ஒரு கோடிக்கும் மேற்பட்டோர் புனித நீராடியுள்ளனர்.

லட்சக்கணக்கானோர் புனித நீராடுவதற்காக காத்திருப்பதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இதன்காரணமாக, விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

கடந்த மாதம் 13-ஆம் தேதி தொடங்கிய இந்த மகா கும்பமேளா, வரும் 14-ஆம் தேதிவரை நடைபெறவுள்ளது.

இதுவரை 36 கோடிக்கும் மேற்பட்டோர் புனித நீராடியுள்ளனர்.

பக்தர்களின் வசதிக்காக சிறப்பு ரயில்களும் இயக்கப்பட்டு வருகின்றன.

நாள்தோறும் கண்கவர் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்று வருகின்றன.

*(சவுண்ட் பைட் - **Song - 8** செகண்ட்ஸ்)*

<<<<<<>>>>>>

டிஜிட்டல் பணப்பரிவர்த்தனை கடந்த நிதியாண்டில் 18 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு அதிகரித்துள்ளதாக நிதித்துறை இணையமைச்சர் திரு பங்கஜ் சௌத்ரி கூறியுள்ளார்.

மக்களவையில் கேள்விநேரத்தின்போது இதனை தெரிவித்த அவர், ஆண்டுதோறும் 44 சதவீத வளர்ச்சியை டிஜிட்டல் பணப்பரிவர்த்தனை கண்டு வருவதாக கூறினார்.

<<<<<<>>>>>>

அமைப்புசாரா தொழிலாளர்களுக்கான இணையதளத்தில் இதுவரை 30 கோடியே 58 லட்சம் பேர் பதிவு செய்துள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

மத்திய அரசின் தொழிலாளர் நலனுக்கான 12 திட்டங்களோடு இந்த இணையதளம் இணைக்கப்பட்டிருப்பதாக தொழிலாளர் நலத்துறையின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

நாள்தோறும் 33 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் இதில் பதிவு செய்து வருவதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

22 மாநில மொழிகளில் இந்த இணையதளம் செயல்படுவதாகவும் அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

வேலைவாய்ப்பின்மை குறைந்து வருவதாக மத்திய தொழிலாளர் நலத்துறை இணையமைச்சர் **Shobha Karandlaje** கூறியுள்ளார்.

மக்களவையில் இதனை தெரிவித்த அவர், ஆறு ஆண்டுகளுக்கு முன்னர் ஆறு சதவீதமாக இருந்த வேலைவாய்ப்பின்மை, தற்போது கடந்த நிதியாண்டில் 3 புள்ளி இரண்டு சதவீதமாக குறைந்துள்ளதாக கூறினார்.

வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்காக பல்வேறு திட்டங்களை மத்திய அரசு செயல்படுத்தியுள்ளதாகவும் **Shobha Karandlaje** தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

சென்னை அகில இந்திய வானொலியின் மாநில செய்திப் பிரிவு வழங்கும் 'செய்திச்சுடர்' நிகழ்ச்சியில், மத்திய பட்ஜெட் குறித்து பட்டய கணக்காளர் அபிஷேக் முரளியுடன், ஊடகவியலாளர் சியாமளா பங்கேற்ற கலந்துரையாடல் நிகழ்ச்சி இன்று இடம் பெறுகிறது.

ஒருங்கிணைந்த அலைவரிசையில் இரவு மணி 9.15-க்கு ஒலிபரப்பாகும் இந்த நிகழ்ச்சியை மாநிலத்தில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் அஞ்சல் செய்யும்.

<<<<<<>>>>>>

சிரியாவில் இன்று நேரிட்ட குண்டுவெடிப்பு சம்பவத்தில் 18 பெண்கள் உட்பட 19 பேர் உயிரிழந்தனர். 15 பேர் காயமடைந்தனர்.

**Manbij** புறநகர் பகுதியில் விவசாயத் தொழிலாளர்களுடன் சென்று கொண்டிருந்த வாகனத்தின்மீது இந்த தாக்குதல் சம்பவம் நடத்தப்பட்டதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அந்த வழித்தடத்தில் நிறுத்தப்பட்டிருந்த காரில் வைக்கப்பட்டிருந்த குண்டுகள் வெடித்ததாகவும், இதன் காரணமாக உயிரிழப்புகள் ஏற்பட்டதாகவும் ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த குண்டுவெடிப்பில் காயமடைந்த 15 பேரில் பலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாகவும் அந்நாட்டு காவல்துறை தெரிவித்துள்ளது.

இந்த தாக்குதல் சம்பவத்திற்கு இதுவரை எந்தவொரு அமைப்பும் பொறுப்பேற்கவில்லை.

**<<<<<<>>>>>>**

ஈரானில் நடைபெற்ற சர்வதேச சேலஞ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Manraj Singh** பட்டம் வென்றார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்தில் அவர் 21-19, 21-10 என்ற செட் கணக்கில், இந்தியாவின் **Tarun Reddy Katam**-ஐ வென்றார்.

---------------

தேசிய விளையாட்டுப்போட்டிகளில் தமிழகம் இன்று நான்கு தங்கம், ஒரு வெள்ளிப்பதக்கம் வென்றது.

உத்தராகண்டில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் ஸ்குவாஷ் ஆடவர் ஒற்றையர் பிரிவில் வேலவன் செந்தில் குமார் தங்கப்பதக்கம் வென்றார்.

இறுதிப்போட்டியில் அவர் மகாராஷ்ட்ராவின் ராகுலை வென்றார்.

மகளிர் பளுதூக்கும் 87 கிலோ எடைப்பிரிவில் ஆரோக்கியா தங்கப்பதக்கம் வென்றார்.

ஆடவர் 50 மீட்டர் நீச்சல் போட்டியில் ரோஹித் தங்கப்பதக்கம் வென்றார்.

ஸ்குவாஷ் போட்டியின் ஆடவர் குழு பிரிவிலும் தமிழகம் தங்கப்பதக்கத்தை வென்றது.

ஆடவர் பளுதூக்கும் போட்டியில் **‘Rutra Mayan ’** வெள்ளிப்பதக்கம் வென்றார்.

----------

மலேசியாவில் நடைபெற்ற 19 வயதுக்கு உட்பட்டோருக்கான உலக மகளிர் டுவென்டி – டுவென்டி கிரிக்கெட் கோப்பையை வென்ற இந்திய அணிக்கு ஐந்து கோடி ரூபாய் பரிசுத்தொகையை கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் அறிவித்துள்ளது.

**<<<<<<END>>>>>>**